DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C.104/2017 /Crlmp: 01/2024 |
| Deposition of Witness for | : | C.W.1 |
| Name | : | **கார்த்திகேயன்** |
| Father's Name | : | **பிச்சை** |
| Village | : | **எம். கீழப்பட்டி** |
| Taluk | : | **உசிலம்பட்டி, மதுரை** |
| Calling | : | **காவல் ஆய்வாளர்** |
| Age | : | **43/2025** |

**(வழக்கின் எதிரி தலைமறைவு .)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 01.09.2025

**முதல் விசாரணை:**

என் பெயர் கார்த்திகேயன் 45/2025, தகப்பனார் பெயர் பிச்சை, இளையான்குடி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் தலைமறைவாக உள்ள எதிரி அகமது காசிம் என்ற பீடாகாசிம் த.பெ.OMR. சித்திக் என்ற சையது அகமது என்பவருக்கு எதிராக கு.வி.மு.ச பிரிவு 82 ன் கீழ் **CRLMP.No. 01/2024** தாக்கல் செய்துள்ளேன். அதன் மீதான 05.06.2025 தேதியிட்ட உத்தரவின்படி அறிவிப்புகளை சென்னை, ராயபுரத்தில் நம்பர்.114, சேக் மேஸ்திரி தெருவில் உள்ள எதிரியின் வீட்டில், மற்றும் சென்னை, தண்டையார்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய் ஆய்வாளர் முன்பாக ஒட்டியும், மக்கள் அதிகமாக கூடும் பகுதியில் ஒட்டியும் அதற்கு உண்டான நிழற்படங்கள் மற்றும் செய்தித்தாள்

வெளியிட்ட விளம்பர அறிவிப்பு நகலையும் மற்றும் காவல்துறை அறிவிப்பு நகலையும் தாக்கல் செய்கிறேன். அது தவிர 23.08.2025 அன்று வணக்கம் இந்தியா நாளிதழில் அறிவிப்பும் வெளியிட்டுள்ளேன். மேற்படி அறிவிப்புகளை வெளியிட்டதற்கான எனது அறிக்கையை தாக்கல் செய்கிறேன். அந்த அறிக்கை Ex.C1 ஆகும். இன்றுவரையில் மேற்படி எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை, எனவே, மேற்படி எதிரி அறிவிக்கப்பட்ட எதிரியாக விளம்புகை செய்யுமாறு வேண்டுகிறேன்.

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.09.01 15:23:13 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**

சிவகங்கை..